**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 395 | of | 2023 |

**2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 29-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சரவணன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-29.07.2026**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

15.02.2015 ல் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் திருமணம் நடந்தது. எனக்கு ஒரு மகன் உள்ளார். அவர் வயது 8 ஆண்டுகள். 10.03.2023 அன்று என் மனைவி என்னைவிட்டு பிரிந்து சென்றார். நானும் பிரதிவாதியும் கணவன் மனைவியாக இணைந்து வாழ்ந்த காலத்தில் நடந்த பரிவர்த்தனை சம்மந்தமாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளதா என்றால் இரண்டு பேர் பெயரில் சொத்து வாங்குவதற்காக பிரதிவாதி வங்கி கணக்கிற்கு தொகை அனுப்பினேன். பாலாஜி நகர், நங்கநல்லூரில் உள்ள சொத்து வாங்குவதற்காக ரூ.40 லட்சம் பிரதிவாதி வங்கி கணக்கில் செலுத்தினேன். ஆனால் சொத்தின் கிரயம் முடிக்கப்படவில்லை. என் மனைவி, என்

மாமனார் மற்றும் என் மனைவியின் தங்கை மூவரும் சேர்ந்து எனக்கு ரூ.1கோடியே 34 லட்சம் செலுத்த வேண்டும் என்று அ.வ.எண் 393/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. என் மனைவிக்கு எதிராக தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் HMOP 161/2023 விவாகரத்து கோரி தாக்கல் செய்து நடந்து வருகிறது. விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் அ.வ.எண் 393/2023 தாக்கல் செய்தேன். ஆனால் அதற்கு முன்பே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டேன். என்னுடைய இளவல் மகன் பிரதிவாத பராமரிப்பில்தான் இருந்து வருகிறார். திருமணம் ஆகும் போது நான் scientist ஆக கிண்டியில் வேலை பார்த்தேன். திருமணத்தின் போது என் மனைவி MBBS house surgeon ஆக படித்து வந்தார். எங்கள் திருமணத்தின் போது என் மாமனார் பெங்களூர் L &T ல் வேலை பார்த்தார். எங்கள் திருமணத்திற்கு முன்பு என் மாமனார் அபுதாபியில் சிறிது காலம் வேலை பார்த்தாக கேள்விபட்டு இருக்கிறேன். திருமணம் ஆகி 3 மாதத்தில் நான் scientist வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். நான் scientist ஆக அரசு வேலையில் இருந்த போது எனக்கு மாத சம்ளம் ரூ. 50 ஆயிரம் ஆகும். நான் வேலையை விட்டு வந்த பிறகு பணம் சம்பாதிக்க வேண்டி அபுதாபி சென்றேன். அங்கு எனக்கு மாத சம்பளம் ரூ. 4 லட்சம் ஆகும். நான் என் மனைவிக்கும் மனைவி குடும்பத்தாருக்கும் மேற்படி தொகைகள் அனுப்பயிது அனைத்துமே என்னுடைய வங்கி கணக்கில் இருந்து அனுப்பப்பட்டவை ஆகும். அந்த ஆதாரங்களை ஆவணங்களாக வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த தொகைகள் நான் அபுதாபியில் வேலை

பார்த்து ஈட்டிய சம்பளத் தொகைகள் ஆகும். அபுதாபியில் national marine dredging company ல் costal engineer ஆக வேலை பார்த்தேன். என்னுடைய appointment letter மற்றும் சம்பள ரசீதுகள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வங்கி கணக்கிற்கு என் மாமனார் ரூ.1 கோடியே 26 லட்சம் செலுத்தியிருந்தார். அந்த பணத்தை எடுத்துதான் இரண்டு வழக்கு தொகைகளும் என்னால் அனுப்பப்பட்டது என்றால் அதை மறுக்கிறேன். மண்ணிவாக்கம் சொத்தை இருவர்பெயரிலும்கூட்டாக கிரயம் பெற்றோம். அதற்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 2 கோடியே 80 லட்சம் ஆகும். கிரய ஆவணப்படி ரூ. 2 கோடி கிரய தொகை ஆகும். stamp duty ரூ.21 லட்சம் ஆகும். 12.12.2022 அன்று அந்த கிரயம் முடிக்கப்பட்டது. அந்த கிரய பத்திரத்தின் அசல் ஆவணம் என்னிடம்தான் உள்ளது. அந்த கிரய பத்திரம் அசல் தாக்கல் செய்யவில்லை. கணவன் மனைவி இருவரும் தங்களுக்குள் பேசி, உறவு முறையில் செய்யக் கூடிய பரிவர்த்தனைகள் எதுவும் கடனாக கருதி வசூலிக்கப்படக் கூடியவை அல்ல என்றால் அதை மறுக்கிறேன். சொத்தில் எனக்குரிய பாகத்தை மட்டுமே கேட்க முடியும் என்றும், கிரய தொகையில் என்னுடைய தொகை என்று திருப்பி கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. பாக பிரிவினை கேட்டு வழக்கு இதுநாள் வரை தாக்கல் செய்யவில்லை. என் மனைவி மீதி நான் தவறான குற்றச்சாட்டுகளை வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மண்ணிவாக்கம் சொத்தை என்

பெயருக்கு release deed எழுதி தர பிரதிவாதியை நிர்பந்தித்தேன் என்றும் அதற்கு பிரதிவாதி ஒப்புக் கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu